# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2016

## குடியியற் கல்வி

1725

தரம்: 06

சுட்டெண் :.........................................

நேரம்: 1.30 மணித்தியாலம்


### பகுதி - I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து இன்று வரையாக பாடசாலையில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பாக அறிய உதவும் சாதனம்.

1) கிராம வரலாறு  2) பாடசாலை வரலாறு
3) கோயில் வரலாறு  4) குடும்ப வரலாறு

02) பாடசாலை நிர்வாக சட்டமைப்பில் மிக உயர்ந்த இடத்தில் இருப்பவர்.

1) ஆசிரியர்  2) அதிபர்  3) வகுப்பாசிரியர்  4) பகுதித்தலைவர்

03) உமது வயதை அறிய பயன்படுத்தும் முக்கிய ஆதாரம்.

1) சம்பவத்திரட்டுப் புத்தகம்  2) தேர்ச்சி அறிக்கை
3) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்  4) பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறு

04) இலங்கையில் இலவச கல்வி ஆரம்பமாவதற்கு பாரிய பங்களிப்பு செய்தவர்.

1) சேர்.பொன். அருணாசலம்  2) பேராசிரியர் சேனகபிபிலே
3) அநாகரிக தர்மபால  4) C.W.W.கன்னங்கரா

05) உமது பாடசாலை அமைந்துள்ள மாகாணம்

1) மத்திய மாகாணம்  2) வடக்கு மாகாணம்
3) மேல் மாகாணம்  4) கிழக்கு மாகாணம்

06) கல்விசாரா ஊழியர்களில் அடங்குபவர்

1) அதிபர்  2) பகுதித்தலைவர்
3) வகுப்பாசிரியர்  4) அலுவலக உதவியாளர்

07) பாடசாலைச் சின்னத்தில் பொறிக்கப்பட்டிருப்பது

1) பாடசாலைக் கீதம்  2) மகுட வாசகம்
3) தேசிய இலட்சினை  4) பாடசாலை வரலாறு

08) எமது நாட்டின் தற்போதைய கல்வியமைச்சர்

1) ஆனந்த சமரக்கோன்  2) அகில விராஜ் காரியவசம்
3) திஸ்ஸ ஹேவாவிதான  4) C.W.W.கன்னங்கரா



kalvi.lk

09) திடீரென கோபம் ஏற்பட்டல் என்பது ஒருவரிடம் உள்ள

1) ஆளுமை 2) திறமை 3) பலம் 4) பலவீனம்

10) பாடசாலை பற்றிய தகவல்களை அறிய உதவும் முக்கிய ஆவணங்களில் ஒன்று.

1) பத்திரிகை 2) சஞ்சிகை 3) சம்பவத்திரட்டு 4) இலவசபாடநூல்

11) ஒருவரிடம் காணப்படும் நற்பண்புகளில் ஒன்று

1) பொறாமை 2) ஒழுக்கம் 3) பயம் 4) கோபம்

12) பாடசாலை ஆரம்பிக்கும் போது முதலில் இடம்பெறுவது.

1) கடவுள் வாழ்த்து 2) தமிழ்மொழி வாழ்த்து

3) பாடசாலைக் கீதம் 4) தேசியகீதம்

13) பாடசாலைத் தனித்துவத்தை காட்டக் கூடிய விடயங்களில் ஒன்று.

1) சீருடை 2) காலணி 3) கட்டடம் 4) மகுட வாசகம்

14) இலங்கையில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை.

1) 24 2) 25 3) 16 4) 20

15) நோயாளர்களுக்கு குறைந்த விலையில் மருந்துகளை வழங்கவேண்டும் என்ற கொள்கையை கொண்டிருந்தவர்.

1) பேராசிரியர் சேகை பிபிலே 2) ஆனந்த சமரக்கோன்

3) ஆர்தர். சி. கிளார்க் 4) கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி

16) பாடசாலையின் பௌதிக வளமாக கருதப்படுவது.

1) ஆசிரியர் 2) அதிபர் 3) வகுப்பாசிரியர் 4) விஞ்ஞான ஆய்வுகூடம்

17) பாடசாலைக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் சந்தர்ப்பம்

1) பாடசாலை தினம் 2) பரிசளிப்பு விழா

3) விளையாட்டுப் போட்டி 4) துக்க தினம்

18) மாணவர்களுக்கான பாடசாலை உணவுத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நிறுவனம்

1) உலக சுகாதார நிறுவனம் 2) உலக உணவு தாபனம்

3) உலக சிறுவர் பாதுகாப்பு அமையம் 4) யுனெஸ்கோ

19) இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி

1) மைத்திரிபால சிறிசேனா 2) மகிந்தராஜபக்ஷ

3) ரணில் விக்கிரமசிங்க 4) இரா. சம்பந்தன்

20) உமது பாடசாலை அமைந்துள்ள கல்வி வலயம்.

1) யாழ்ப்பாணம் 2) வலிகாமம் 3) தீவகம் 4) நல்லூர்

(20x2=40புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## பகுதி - II

(01) தரம் 6 வகுப்பறை செயற்பாடுகளில் ஒன்றான கணிப்பீடு தொடர்பாக பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) நீர் குடியியற் பாடத்தில் செய்த கணிப்பீடு இரண்டினைத் தருக.
2) இக் கணிப்பீட்டுக்கு நீர் பயன்படுத்திய பொருட்கள் 2 தருக.
3) இக் கணிப்பீட்டுக்கு ஆசிரியரால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் 2 எழுதுக.
4) இக் கணிப்பீடுகளுக்கு தகவல்களை பெற்றுக் கொண்ட வழிகள் எவை?
5) இக் கணிப்பீட்டை மேற்கொண்டதால் கிடைத்த நன்மைகள் 3 தருக.

(10புள்ளிகள்)

(02) 1) உமது பாடசாலையின் மகுட வாசகத்தை எழுதுக.
2) உமது பாடசாலையின் தனித்துவ அடையாளம் 3 தருக.
3) உமது பாடசாலையின் கீதத்தில் முதல் அடியினை பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுக.
4) பாடசாலைக் கீதம் பாடும் போது நிற்கும் முறையைக் குறிப்பிடுக.

(10புள்ளிகள்)

(03) 1) உம்மிடம் காணப்படும் பலமான விடயங்கள் 2 எழுதுக.
2) உமது நண்பரிடம் இனங்காணப்பட்ட பலவீனங்கள் 3தருக.
3) தவறான வழியில் நடக்கும் நண்பனை திருத்தும் வழிமுறைகள் 2தருக?
4) பலமான விடயங்களை மேலும் வளப்படுத்திக் கொள்ள பாடசாலையில் இடம்பெறும் செயற்பாடுகள் 3 தருக.

(10புள்ளிகள்)

(04) 1) பாடசாலை ஒழுங்கமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நான்கு நபர்களின் பெயர்களை குறிப்பிடவும்.
2) பாடசாலை ஒழுங்கமைப்பில் இடம்பெறும் 3 குழுக்களைக் குறிப்பிடவும்.
3) பாடசாலை இலட்சினை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 2எழுதுக.
4) உங்கள் ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ள அரசாங்கத்தினால் வழங்கப்படும் வசதிகள் எவை?

(10புள்ளிகள்)

(05) 1) மாணவரின் கடமைகள் 3 எழுதுக.
2) உங்கள் பாடசாலையில் இடம்பெறும் விழாக்கள் 3 தருக.
3) பாடசாலை கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பங்கள் 3 எழுதுக.
4) உங்கள் பாடசாலையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பினை வரைக.

(15புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினுாடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page